**சுருக்கம்**

பாதாள சாக்கடைத் திட்டம் – ஆவடி நகராட்சி – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் ரூ.158.05 கோடியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்தவும் ரூ.479 இலட்ச செலவில் ஆண்ட பராமரிப்பினை மேற்கொள்ளவும் – நிர்வாக அனுமதி வழங்குதல் – ஆணை –வெளியிடப்படுகிறது

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.2) துறை

அரசாணை (ப) எண்.62 நாள்: 12.04.2008

படிக்க

1. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புதுப்பித்தல் திட்டத்திற்கான மாநில அளவிலான வழிப்படுத்தும் குழவின் 28.12.2007 அன்று நடைபெற்ற கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்பு.
2. மத்திய திட்ட அனுமதி வழங்குதல் மற்றும் கண்காணிக்கும் குழுவின் 29.02.2008 அன்று நடைபெற்ற கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்பு
3. நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண்.50573//2006/UGSS2, நாள் 30.3.2008.

ஆணை:

முதலாவதாகப் படிக்கப்பட்ட ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புதுப்பித்தல் திட்டத்திற்கான மாநில அளவிலான வழிப்படுத்தும் குழுக் கூட்டத்தில் செய்யப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் ஆவடி நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த, சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் தயார் செய்யப்பட்ட ரூ.158.05 கோடி மதிப்பிலான விரிவான திட்ட அறிக்கை, தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சிக் கழகம் மூலம் மத்திய அரசின் நகர்ப்புர வளர்ச்சித் துறையின் மத்திய திட்ட அனுமதி வழங்குதல் மற்றும் கண்காணிக்கும் குழுவின் (Central Sanctioning and Monitoring Committee) கூட்டத்திற்கு அனுப்பப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அக்கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்பின் அடிப்படையில் தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் உள் கட்டமைப்பு வளர்ச்சிக் கழகம் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புதுப்பித்தல் திட்டத்தின் கீழ் ஆவடி நகராட்சியில் ரூ.158.05 கோடியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்தவும், ரூ.4.79

கோடி செலவில் ஆண்டு பராமரிப்பினை மேற்கொள்ளவும் பின்வரும் நிதிப் பகிர்வின் அடிப்படையில், கடன் மற்றும் மானியமாக ரூ.79.02 கோடிக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

| | |
|---|---|
| மானிய (40%) | ரூ.63.22 கோடி |
| வட்டியில்லா கடன் (10 %) | ரூ.15.81 கோடி |
| சொந்த நிதி / நிறுவன பங்கு | ரூ.79.02 கோடி |

2.மேலும், ஆவடி நகர்மன்றமும் தனது தீர்மான எண்.1214, நாள் 26.03.2008ல் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் இத்திட்டத்தை மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெற தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அதன் அடிப்படையில் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் இப்பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான நிர்வாக அனுமதி கோரும் கருத்துருவை அரசிற்கு அனுப்பியுள்ளார்.

3. நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்து, அதனை ஏற்று, ஆவடி நகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.158.05 கோடியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்தவும், ரூ.479 இலட்ச செலவில் ஆண்டு பராமரிப்பினை மேற்கொள்ளவும் நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து
அரசுச் செயலாளர்

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5.
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், சென்னை–35.
நிர்வாக இயக்குநர், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றும் வாரியம், சென்னை–2
ஆணையர், ஆவடி நகராட்சி, சென்னை
மாநில தலைமைக் கணக்கர், சென்னை–18.
மாநில கணக்காயர், (துணிக்கை), சென்னை–18
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை–9
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, குறளகம், சென்னை–108.
நகல்:
நிதித்துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (வ/செ) துறை, சென்னை–9.

–/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/–